# பாடசாலைகளுக்கான COVID குறித்த வினைத்திறன் மிக்க நடவடிக்கைகள்

## குடும்பங்களுக்கான தகவல்கள்

மாணவ-மாணவியரது கல்வி, வளர்ச்சி மற்றும் பொது-நலத்திற்கு வகுப்பறையில் ஒன்றாய்ச் சேர்ந்து படிப்பதே மிகச் சிறந்தது என்பதை நாம் அறிவோம். நமது மாணவ-மாணவியரது பொது-நலனுக்கும், நிலையான மற்றும் ஆக்கபூர்வமான கற்றல் சூழலுக்கும் முந்துரிமை அளிக்க நமக்கு ஏது செய்யும் வகையில் இந்தப் 'பருவ' (term) த்தில் அநேக நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து அமல்படுத்திவருவோம்.

### சுகவீனமாக இருந்தால் வீட்டிலேயே இருங்கள்

- உங்களுடைய பிள்ளைக்கு உடல்-நலம் சரியில்லை என்றால், நீங்கள் கட்டாயமாக அவரை வீட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். மிகவும் மிதமான COVID-19 அறிகுறிகளே அவருக்கு இருந்தால் கூட, அவர் COVID நோயறிவுச் சோதனை ஒன்றை மேற்கொண்டு அவரைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.
- உங்களுடைய பிள்ளைக்கு தொற்று இல்லை என்ற எதிர்முக முடிவு கிடைத்த பிறகும், அவருக்கு நோயறிகுறிகள் எதுவும் இல்லாத பொழுதுமே அவர் பாடசாலைக்குத் திரும்பலாம்.
- உங்களுடைய பிள்ளைக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அந்த நேர்முக முடிவை 'NSW சேவை' (Service NSW)-யினருடன் பதிவு செய்யுங்கள், 7 நாட்களுக்கு அவரைத் தனிமைப்படுத்துங்கள் மற்றும் NSW சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுங்கள்.

### தடுப்பூசியேற்றங்கள்

- உங்களையும், உங்களுடைய குடும்பத்தினரையும், சமூகத்தினரையும் பாதுகாத்துக்கொள்வதற்கான மிகச் சிறந்த வழி COVID-19 மற்றும் 'ஃப்ளூ' ஆகியவற்றிற்கான தடுப்பூசிகளை இட்டுக்கொள்வதேயாகும். வைரஸ் நோய்களுக்கு எதிராக உங்களுடைய நோயெதிர்ப்புத்-திறனுக்கு உதவி செய்ய தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வது ஒரு பாதுகாப்பான மற்றும் செயலூக்கம் மிக்க வழியாகும்.
- அவர்களுடைய உடல் நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பிரதான பாடசாலைச் சூழல்களிலுள்ள தகுதி பெறும் அனைத்துப் பணியாளர்களும், மாணவ-மாணவியரும் அவர்களது தடுப்பூசியேற்றத்தைப் பொருத்து நடப்பு-நாள் வரை சரியான நிலையில் இருக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். COVID-19-இற்கு ஆளானால் தீவிரமாய் நோய்வாய்ப்படும் ஆபத்து அதிகமாக உள்ள நமது மாணவ-மாணவியரைப் பாதுகாக்கும் பொருட்டு COVID-19-இற்கு எதிராக இரண்டு தடுப்பூசிகளை இட்டுக்கொண்டிருக்க வேண்டுமென விசேட நோக்கப் பாடசாலைகளில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் வேண்டப்படுகின்றனர்.

### தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்கள்

- தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பதாக அடையாளம் காணப்படும் மாணவ-மாணவிகள் அவர்கள் பாடசாலைக்கு வருவதற்கு முன்பாக 5 பாடசாலை நாட்களுக்கு ஒவ்வொரு நாள் காலையும் தொற்று இல்லையெனும் எதிர்முக COVID-19 சோதனை முடிவைப் பெற்றிருப்பதாகப் பாடசாலைக்குத் தெரிவிக்கப்பட்டால், அவர்கள் பாடசாலைக்கு வரலாம்.
- உணவருந்தும் அல்லது உடற்பயிற்சி செய்யும் நேரங்களைத் தவிர, செகண்டரி பாடசாலை மாணவ-மாணவிகள் உட்புறங்களில் இருக்கும் பொழுது முகக் கவசம் ஒன்றைக் கட்டாயமாக அணிந்திருக்க வேண்டும். உணவருந்தும் அல்லது உடற்பயிற்சி செய்யும் நேரங்களைத் தவிர ஆரம்பப் பாடசாலை மாணவ-மாணவிகள் உட்புறங்களில் இருக்கும் பொழுது முகக் கவசம் ஒன்றைக் அணிந்திருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்படுகிறது.
- தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பதாக அடையாளம் காணப்படும் மாணவ-மாணவிகள் எவரும் இரவுத்-தங்கல் வெளிச் சுற்றுலாக்கள் அல்லது பாடசாலை முகாம்கள் போன்ற அதியுயர் ஆபத்து நிலவும் சூழல்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டர்.
- தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்பதால் குறிப்பிட்ட நோக்கப் பாடசாலைகளிலும், ஆதரவுதவிக் குழுக்களிலும் படிக்கும் மாணவ-மாணவிகளால் பாடசாலைக்கு வர இயலாது, மற்றும் அவர்கள் தனிமைப்பாட்டில் இருக்கும் பொழுது தொலை-வழிக் கல்வி முறை மூலமாகப் படிக்க அவர்களுக்கு உதவியளிக்கப்படும்.



NSW GOVERNMENT

## துரித நோயறிவுச் சோதனை

- COVID-19 -இற்கான மிதமான அறிகுறிகளே உங்களுடைய பிள்ளைக்கு இருந்தாலும் துரித நோயறிவுச் சோதனிகள் பயன்படுத்தப்படவேண்டும், அல்லது தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவராக அவர் பாடசாலைக்கு வருவாரேயானால் துரித நோயறிவுச் சோதனிகள் தினமும் பயன்படுத்தப்பட வேண்டும்.
- உங்களுடைய பிள்ளைக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவருடைய தனிமைப்பாட்டுக் காலம் முடியும் வரையும், நோயறிகள் அவருக்கு அறவே இல்லாத வரையும் அவர் பாடசாலைக்குக் கட்டாயமாக வரக்கூடாது. நேர்முகமான துரித நோயறிவுச் சோதனை முடிவுகள் 'NSW சேவை' (Service NSW)-யுடன் கட்டாயம் பதிவுசெய்யப்பட வேண்டும்.
- தொற்று இல்லையெனும் எதிர்முக முடிவை உங்களுடைய பிள்ளை பெற்றால், ஆனால் அவருக்கு இன்னும் நோயறிகுறிகள் இருந்தால், அவருக்கு அறிகுறிகள் அறவே இல்லாத வரை அவர் பாடசாலைக்கு வரக்கூடாது.
- பணியாளர்களுக்கும், மாணவ-மாணவியருக்கும் 'பருவம் 3'-இன் ஆரம்பத்தில் 5 துரித நோயறிவுச் சோதனிகள் உள்ள 1 பொதி அவர்களுடைய பாடசாலையினால் கொடுக்கப்படும். குறிப்பிட்ட நோக்கப் பாடசாலைகளிலும், ஆதரவுதவிக் குழுக்களிலும் உள்ள பணியாளர்களுக்கும், மாணவ-மாணவியருக்கும் 'பருவம் 3'-இன் ஆரம்பத்தில் 5 துரித நோயறிவுச் சோதனிகள் உள்ள 2 பொதிகள் அவர்களுடைய பாடசாலையினால் கொடுக்கப்படும்.
- திடீர்த் தொற்றுப் பரவல் ஒன்று ஏற்படும் தருவாயில், கண்காணிப்புச் சோதனை நோக்கங்களுக்காக துரித நோயறிவுச் சோதனிகள் பாடசாலைத் தலங்களில் இருப்பில் வைக்கப்பட்டிருப்பதைப் பாடசாலைகள் பராமரித்துவரும்.

## சுகாதாரப் பழக்க-வழக்கங்கள் மற்றும் சுத்திகரிப்பு

- தவறாமல் அவ்வப்போது தம் கைகளை சோப்பு மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி கழுவிவருமாறும், தேவைப்படும் பொழுது சரீரப் பாதுகாப்பு சாதனங்களைப் பயன்படுத்துமாறும் மாணவ-மாணவிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- அடிக்கடிக் கை-படும் பகுதிகள், ஏனைய வன்-மேற்பரப்புகள், கதவின் கைப்பிடிகள், பூட்டுப்-பெட்டிகள், மின் விளக்கு 'ஸ்விட்சு'கள் மற்றும் படிக்கட்டுகளின் ஓரமாக உள்ள கைப்பிடிக் கம்பிகள் மற்றும் ஆள் நடமாட்டம் உள்ள பகுதிகள் ஆகியவற்றின் மீது அதிகரிக்கப்பட்ட பகல்-வேளைச் சுத்திகரிப்புப் பணிகள் கவனம் செலுத்தும்.

## காற்றோட்டம்

- தொற்றுப் பரவலைக் குறைந்தபட்சமாக்குவதற்கான மிகச் சிறந்த வழி நல்ல காற்றோட்டமும், தூய்மையான காற்றுமேயாகும்.
- குளிர் அதிகமாக இருக்கும் மாதங்களில், சௌகரியமான உஷ்ண நிலையைப் பராமரிப்பதற்கு, காற்றோட்ட ஏற்பாடுகளுடன், 'ஹீட்டிங்க்' சாதனங்களும் பயன்படுத்தப்படும்.
- போதுமான அளவிற்கான காற்றோட்டம் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பொதுப் பாடசாலைகளில் மாணவ-மாணவிகள் பயிலும் அனைத்துப் பகுதிகளும் சோதிக்கப்பட்டுள்ளன, அத்துடன் தேவைப்படும் இடங்களில் காற்றுச்-சுத்திகரிப்பு சாதனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- இயலுமான தருணங்களில் வெளிப்புறப் பகுதிகளின் பயன்பாடு தொடர்ந்து ஊக்குவிக்கப்படும்.

## முகக் கவசங்கள்

- குறிப்பாக உட்புறப் பகுதிகளிலும், காற்றோட்டமும் உடல்ரீதி விலகலும் சாத்தியமாகாத தருணங்களிலும், பிரதான பாடசாலைச் சூழல்களில் உள்ள அனைத்துப் பணியாளர்களும், மாணவ-மாணவிகளும் இயலும் பொழுது முகக் கவசங்களை அணியவேண்டுமென வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- COVID-19 தொற்று ஏற்பட்டால், தீவிர நோய்வாய்ப்படும் ஆபத்து அதிகமாக உள்ள மாணவ-மாணவிகளுடன் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் முகக் கவசங்கள் அவசியமாகும்.
- வருகையாளர்கள் மாணவ-மாணவியருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் பொழுது முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்று வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது, அத்துடன் COVID-19 தொற்று ஏற்பட்டால், தீவிர நோய்வாய்ப்படும் ஆபத்து அதிகமாக உள்ள மாணவ-மாணவிகளுடன் அவர்கள் கலந்து செயல்படும் பொழுது முகக் கவசங்கள் அணிந்திருக்க வேண்டுமென வேண்டப்படுகிறது.
- தொற்று உள்ளவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்களாக 'ஆண்டு 7' மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் மாணவ-மாணவிகள் உட்புறங்களில் இருக்கும் பொழுது அவர்களுக்கு முகக் கவசங்கள் தேவைப்படும், மற்றும் இவர்களை விட வயதில் குறைந்த மாணவ-மாணவிகளுக்கு முகக் கவசங்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றன.
- COVID-19-இல் இருந்து அவர்கள் மீண்ட பிறகு வரும் 3 நாட்களுக்கு முகக் கவசம் அணியவேண்டுமென அனைத்து மாணவ-மாணவியருக்கும் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது.

## வருகையாளர்கள்

- வருகையாளர்களுடைய தடுப்பூசித் தகுநிலை எதுவாக இருந்தாலும் அவர்கள் பிரதான பாடசாலைத் தலங்களுக்கு வரலாம்.
- குறிப்பாக உட்புறங்களில் இருக்கும் பொழுது, அல்லது இடைவெளி விட்டு விலகியிருக்க இயலாத பொழுது, மற்றும் மாணவ-மாணவியருடன் நேரடியாகக் கலந்து செயலாற்றும் பொழுது முகக் கவசம் ஒன்றை அணிந்திருக்குமாறு அனைத்து வருகையாளர்களும் வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- குறிப்பிட்ட நோக்கப் பாடசாலைகள் மற்றும் ஆதரவுதவிக் குழுக்களுக்கு வரும் தொழிலாளர்கள் மற்றும் சுயவிருப்புத் தொண்டர்களை உள்ளடக்கிய வருகையாளர்கள், குறிப்பாக அவர்கள் மாணவ-மாணவிகளுடன் நேரடியாகக் கலந்து செயலாற்றுவார்களேயானால், முகக் கவசம் ஒன்றைக் கட்டாயமாக அணிந்திருக்க வேண்டும்.
- தொற்று உள்ளவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்களாகப் பாடசாலைக்கு வருபவர்கள் பாடசாலைக்கு இதைத் தெரியப்படுத்தவேண்டும், அத்துடன், உட்புறங்களில் இருக்கும் பொழுது முகக் கவசம் ஒன்றை அணிவது உள்ளடங்க, குறிப்பிட்ட சில வழிகாட்டல்களை அவர்கள் பின்பற்றவேண்டும். தொற்று உள்ளவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கும் வருகையாளர்கள் குறிப்பிட்ட நோக்கப் பாடசாலைகளுக்குச் செல்ல இயலாது.

## நடவடிக்கைகள்

- வெளிச்-சுற்றுலாக்கள் மற்றும், இரவுத்-தங்கல் முகாம்களை உள்ளடக்கிய நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான திட்டமிடலில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆபத்து குறித்த மதிப்பீடுகள் உள்ளடக்கப்படும்.
- தொற்றை நேர்கொள்வதற்கான ஆபத்தைப் பற்றிப் பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் தெரிவிக்கப்படும், மற்றும் குறிப்பிட்ட சில நடவடிக்கைகளுக்கான அனுமதியை அவர்கள் கொடுக்கவேண்டியிருக்கும்.

## உள்ளூர் நெருக்கடி நிலைகளுக்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- வைரஸ் நோய்களின் திடீர்ப் பரவல்கள் உள்ளடங்க, உள்ளூர்ப்-பகுதி நெருக்கடிகளுக்கான தக்க பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ‘திணைக்கள’த்தின் ‘சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பணியாளர்கள் பொதுநலன்’ விடய நிர்வாக அணியினருடன் பாடசாலைகள் இணைவாகச் செயல்படும்.
- சில தருணங்களில், நோய்த்தொற்றின் தொடர்ச்சியை நிறுத்துவதற்காகப் பாடசாலைகள் தற்காலிகமாகக் கூடுதல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தக்கூடும், இந்த நடவடிக்கைகளில் முகக் கவசம் அணிய வேண்டுமெனும் தேவைப்பாடு, அத்தியாவசியம்-இல்லா நடவடிக்கைகளைத் தள்ளி வைத்தல் அல்லது மட்டுப்படுத்துதல், அல்லது குறிப்பிட்ட சில குழுவினரைத் தொலை-வழிக் கல்வி மூலமாகப் பயிலுமாறு அறுவுறுத்துதல் ஆகியன உள்ளடங்கும்.

## தொலை-வழிக் கல்வி

- தொலை-வழிக் கல்வி மூலமாகப் படிக்கும் தேவையுள்ள மாணவ-மாணவிகளுக்கு ஆதரவுதவி அளிப்பதற்காக ‘டிஜிட்டல்’ கல்வி வளங்களைத் ‘திணைக்களம்’ தொடர்ந்து உருவாக்கிவருகிறது.

மேலதிகத் தகவல்களுக்கு education.nsw.gov.au/covid-19/advice-for-families
எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு இன்னும் மேற்கொண்டு தகவல்கள் தேவைப்பட்டால், தயவுசெய்து உங்களுடைய பாடசாலை அதிபரை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யை அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குநருக்குச் சொல்லுங்கள், உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

மாணவ-மாணவிகள் மற்றும் பாடசாலைப் பணியாளர்களுடைய பாதுகாப்பு மற்றும் பொதுநலனுக்குத் தொடர்ந்து முந்துரிமை அளித்துவரும் அதே வேளையில் பாடசாலைச் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில் NSW அரசாங்கம் பற்றுறுதி கொண்டுள்ளது.